செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
40, சாலைப் போக்குவரத்து நிறுவன வளாகம், நூறடிச் சாலை, தரமணி, சென்னை – 600113
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Insitution under Ministry of Education, Government of India, New Delhi)
40, IRT Campus, 100 Feet Road, Taramani, Chennai - 600113

# Translation Project: Classical Tamil Texts

## Applications are invited from experts in translation

Central Institute of Classical Tamil is an autonomous institution functioning under the Ministry of Education of Government of India. Taking the period of history prior to the sixth century A.D as the first phase of the Classical age of Tamil language, literature, culture and civilization, the Institute has mapped out various plans to preserve and safeguard the invaluable treasure of the literary Compositions and other social and Cultural documents in Tamil. One of its ten major projects is to bring out translations of forty – one ancient Tamil Classics into English and other major languages of the world as well as into Sanskrit and other leading Indian languages.

Each translation anthology will consist of the original Tamil text, its transliteration in the Roman script, and its translation in the target language besides a critical introduction, a glossary and an Index.

Several such anthologies have been already brought out by CICT and are being well received here and abroad. But many more are in the pipeline. The texts and the target languages to be taken up immediately are listed below:

### 1. Hindi

1. Cilappatikāram
2. Maṇimēkalai
3. Muttoḷḷāyiram
4. Iṟaiyaṉār Kaḷaviyal

### 2. Kannada

1. Patiṉeṇ Kīḻkkaṇakku (excepting Tirukkuṟaḷ)
2. Cilappatikāram
3. Maṇimēkalai
4. Muttoḷḷāyiram
5. Iṟaiyaṉār Kaḷaviyal

## 3. Malayalam

1. Tolkāppiyam (excepting the first two parts “Eḻuttu” and “Col”)
2. Naṟṟiṇai
3. Kuṟuntokai
4. Aiṅkuṟunūṟu
5. Patiṟṟuppattu
6. Paripāṭal
7. Kalittokai
8. Puṟanāṉūṟu
9. Pattuppāṭṭu
10. Patiṉeṇ Kīḻkkaṇakku (excepting Tirukkuṟaḷ)
11. Muttoḷḷāyiram
12. Iṟaiyaṉār Kaḷaviyal (including the Commentary)
13. Cilappatikāram
14. Maṇimēkalai

## 4. Sanskrit

1. Tolkāppiyam
2. Naṟṟiṇai
3. Kuṟuntokai
4. Aiṅkuṟunūṟu
5. Patiṟṟuppattu
6. Paripāṭal
7. Kalittokai
8. Akanāṉūṟu
9. Puṟanāṉūṟu
10. Pattuppāṭṭu
11. Patiṉeṇ Kīḻkkaṇakku (excepting Tirukkuṟaḷ)
12. Cilappatikāram
13. Maṇimēkalai
14. Muttoḷḷāyiram
15. Iṟaiyaṉār Kaḷaviyal

## 5. Telugu

1. Tolkāppiyam
2. Patiṉeṇ Kīḻkkaṇakku (excepting Tirukkuṟaḷ)
3. Cilappatikāram
4. Maṇimēkalai
5. Muttoḷḷāyiram
6. Iṟaiyaṉār Kaḷaviyal

## Rules and Regulations

- The project is to be completed in one year.
- The financial assistance to be given by the Institute for every work is Rs. 2.5. Lakh (Rupees Two lakh and fifty thousand only). For the Patiṉeṇ Kīḻkkaṇakku texts, the total amount is Rs. 5 Lakh (Rupees Five Lakh only). For the Iṟaiyaṉār Kaḷaviyal, it is Rs. 1 Lakh (Rupees One Lakh only), For the Malayalam translation of Tolkāppiyam, it is Rs. 1 lakh (Rupees One Lakh only)
- All those who have specialised in translation are welcome to send their applications.

- Those who are employed have to route their applications through proper channel.
- Unemployed individuals have to send their applications through some government Institution/NGO.
- Translators will be selected by an expert committee constituted by CICT. Applications will be invited to make their presentations before the Committee.
- Applications from non-governmental organizations should include a xerox copy of the webpage registered in www.ngo.india.gov.in. They should also enclose a copy of the audit report of the last financial year of the organization.
- If the applicant is a scholar in Tamil, he should enclose a documentary evidence to that effect.
- If the translator doesn't possess a sound knowledge of Tamil, he may have the assistance of a Tamil scholar whose acceptance and bio-data should also be sent.
- Such assistants are not eligible for any remuneration by the Institute.
- The translation has to be sent only by **Arial Unicode MS**.
- The translation of the excerpt from the model text given should be sent together with the application.
- CICT will conduct two meetings of the Evaluation Committee during the period of Translation.
- CICT will have the exclusive right to the translated text and its publication.
- Orders will be issued to the selected applicants by CICT as per its rules and regulations.
- If the completed translation is not sent before the due date, the translator has to return the money paid with interest.
- The application given below may be duly filled in and sent by post to **The Director, Central Institute of Classical Tamil, IRT Campus, 100-Feet Road, Taramani, Chennai – 600 113, or by email to classicaltranslation@cict.in, on or before 18.06.2021**
- For more details, please visit our website **www.cict.in**

**Prof. R. Chandrasekaran**
Director
Central Institute of Classical Tamil, Chennai

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
40, சாலைப் போக்குவரத்து நிறுவன வளாகம், நூறடிச் சாலை, தரமணி, சென்னை – 600113
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Insitution under Ministry of Education, Government of India, New Delhi)
40, IRT Campus, 100 Feet Road, Taramani, Chennai - 600113
सत्यमेव जयते

Photo

## Application for Translation Project for Classical Tamil Texts

| | | |
|---|---|---|
| 1. | Name of the applicant in English | |
| | Mother Tongue | |
| 2. | Date of birth & Age | |
| 3. | Qualification | |
| 4. | Designation | |
| 5. | Date of Joining | |
| 6. | Current position | |
| 7. | Total Experience | |
| 8. | Office Address (with Phone Number) | |
| | Residential Address (with Phone Number) | |
| 9. | Mobile Number | |
| 10. | E-mail Address | |
| 11. | Address of the Institution through which the application is routed | |
| | * If registered NGO give ID No. | |

| | | |
|---|---|---|
| 12. | Target language | |
| | Title of the Text to be Translated | |
| 13. | i) Details of translations done earlier<br>ii) Details of publications relating to translation done earlier<br>iii) Translation experience | |

*Registration on Online is mandatory as per GOI guidelines.

Date:

Place:

**Signature of the applicant**

## Sample of translation

### Tamil Text

குற்றியலிகரம் நிற்றல் வேண்டும்

'யா' என் சினைமிசை, உரையசைக் கிளவிக்கு,

ஆவயின் வரூஉம் மகரம் ஊர்ந்தே. (தொல். எழுத்து. மொழிமரபு. 1.)

### Transliteration

kuṟṟiyalikaram niṟṟal vēṇṭum
'yā' eṉ ciṉaimicai, uraiyacaik kiḷavikku,
āvayiṉ varūum makaram ūrntē

## Translation

The shortened /i/ abides
Clustering with /m/
Before the segment called *yā* of the empty morpheme *miyā*
In forms (of verbs) that attention invite.

***(Tranlatation by Dr. V. Murugan)***

### Tamil Text

ஆரம் தாழ்ந்த அணிகிளிர் மார்பின்

தாள்தோய் தடக்கைத் தகைமாண் வழுதி

வல்லை மன்ற நீநயந் தளித்தல்

தேற்றாய் பெரும பொய்யே என்றும்

காய்சினம் தவிராது கடல்ஊர்பு எழுதரும்

ஞாயிறு அனையை நின் பகைவர்க்குத்

திங்கள் அனையை எம்ம னோர்க்கே (புறநானூறு. 59)

பாடியவர்: மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்

பாடப்பட்டோன்: பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன்

திணை: பாடாண். துறை: பூவைநிலை.

### Transliteration

āram tāḻnta aṇikiḷir mārpiṉ

tāḷtōy taṭakkait takaimāṇ vaḻuti

vallai maṉṟa nīnayan taḷittal

tēṟṟāy peruma poyyē eṉṟum
kāyciṉam tavirātu kaṭalūrpu eḻutarum
ñāyiṟu aṉaiyai niṉ pakaivarkkut
tiṅkaḷ aṉaiyai emma ṉōrkkē (puṟanāṉūṟu. 59)

Pāṭiyavar: maturaik kūlavāṇikaṉ cīttalaic cāttaṉār

pāṭappaṭṭōṉ: pāṇṭiyaṉ cittiramāṭattut tuñciya naṉmāṟaṉ

tiṇai: pāṭāṇ. tuṟai: pūvainilai.

**Translation**

Oh King Valuti with breast
Of stirring beauty with flower-garlands
And large hands touching your knees!
Indeed you excel in giving gifts
With love; Lord, you reckon not
Falsehoods uttered (to get gifts).
To your enemies you
Look like the sun which
Rises unfailingly with burning
Ferocity over the sea;
To those like us, indeed
You look like the moon

***(Tranlatation by S.M. Ponniah)***

**Model texts**

## தொல்காப்பியம்

1. குற்றியலிகரம் நிற்றல் வேண்டும்

   'யா' என் சினைமிசை, உரையசைக் கிளவிக்கு,

   ஆவயின் வரூஉம் மகரம் ஊர்ந்தே (தொல். எழுத்து. மொழிமரபு. 1.)

2. குன்று இசை மொழி வயின் நின்று இசை நிறைக்கும்

   நெட்டெழுத்து இம்பர் ஒத்த குற்றெழுத்தே (தொல். எழுத்து. மொழிமரபு. 8)

3. புள்ளி இறுதியும் உயிர் இறு கிளவியும்

   சொல்லிய அல்ல ஏனைய எல்லாம்,

   தேரும் காலை, உருபொடு சிவணி,

   சாரியை நிலையும் கடப்பாடு இலவே (தொல். எழுத்து. உருபியல். 30)

4. இயற்பெயர்க் கிளவியும் சுட்டுப்பெயர்க் கிளவியும்

   வினைக்கு ஒருங்கு இயலும் காலம் தோன்றின்,

   சுட்டுப்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்;

   இயற்பெயர் வழிய' என்மனார் புலவர் (தொல். சொல். கிளவி. 38)

5. மிக்கதன் மருங்கின் வினைச்சொல் சுட்டி,

   அப் பண்பு குறித்த வினைமுதற் கிளவி,

   செய்வது இல்வழி, நிகழும் காலத்து

   மெய் பெறத் தோன்றும் பொருட்டு ஆகும்மே (தொல். சொல். வினை. 45)

6. 'பொழுதும் ஆறும் உட்கு வரத் தோன்றி

   வழுவின் ஆகிய குற்றம் காட்டலும்,

   ஊரது சார்பும் செல்லும் தேயமும்

   ஆர்வ நெஞ்சமொடு செப்பிய வழியினும்,

   புணர்ந்தோர் பாங்கின் புணர்ந்த நெஞ்சமொடு

   அழிந்து எதிர் கூறி விடுப்பினும், ஆங்கத்

   தாய் நிலை கண்டு தடுப்பினும் விடுப்பினும்

   சேய் நிலைக்கு அகன்றோர் செலவினும் வரவினும்,

கண்டோர் மொழிதல் கண்டது’ என்ப. (தொல். பொருள். அகத். 40)

7. கூதிர், வேனில், என்று இரு பாசறைக்
காதலின் ஒன்றிக் கண்ணிய வகையினும்;
ஏரோர் களவழி அன்றி, களவழித்
தேரோர் தோற்றிய வென்றியும்; தேரோர்
வென்ற கோமான் முன்தேர்க் குரவையும்;
ஒன்றிய மரபின் பின்தேர்க் குரவையும்;
பெரும் பகை தாங்கும் வேலினானும்,
அரும் பகை தாங்கும் ஆற்றலானும்,
புல்லா வாழ்க்கை வல்லாண் பக்கமும்;
ஒல்லார் நாண, பெரியவர்க் கண்ணிச்
சொல்லிய வகையின் ஒன்றொடு புணர்ந்து,
தொல் உயிர் வழங்கிய அவிப்பலியானும்;
ஒல்லார் இடவயின் புல்லிய பாங்கினும்;
பகட்டினானும் ஆவினானும்
துகள் தபு சிறப்பின் சான்றோர் பக்கமும்;
கடி மனை நீத்த பாலின்கண்ணும்;
எட்டு வகை நுதலிய அவையகத்தானும்;
கட்டு அமை ஒழுக்கத்துக் கண்ணுமையானும்;
இடை இல் வண் புகழ்க் கொடைமையானும்;
பிழைத்தோர்த் தாங்கும் காவலானும்;
பொருளொடு புணர்ந்த பக்கத்தானும்;
அருளொடு புணர்ந்த அகற்சியானும்;
காமம் நீத்த பாலினானும்; - என்று
இரு பாற் பட்ட ஒன்பதின் துறைத்தே (தொல். பொருள். புறத். 21)

8. கற்பு எனப்படுவது கரணமொடு புணர,
கொளற்கு உரி மரபின் கிழவன் கிழத்தியை,
கொடைக்கு உரி மரபினோர் கொடுப்ப, கொள்வதுவே (தொல். பொருள். கற்பு. 1)

9. ‘பாட்டு, உரை, நூலே, வாய்மொழி, பிசியே,
அங்கதம், முதுசொல், அவ் ஏழ் நிலத்தும்,
வண் புகழ் மூவர் தண் பொழில் வரைப்பின்
நாற் பெயர் எல்லை அகத்தவர் வழங்கும்
யாப்பின் வழியது’ என்மனார் புலவர் (தொல். பொருள். செய். 78)

10. பேடையும், பெடையும், பெட்டையும், பெண்ணும்,
மூடும், நாகும், கடமையும், அளகும்,
மந்தியும், பாட்டியும், பிணையும், பிணவும்,
அந்தம் சான்ற பிடியொடு பெண்ணே (தொல். பொருள். மரபு. 3)

# நற்றிணை

கானல் அம் சிறுகுடிக் கடல் மேம் பரதவர்
நீல் நிறப் புன்னைக் கொழு நிழல் அசைஇத்
தண் பெரும் பரப்பின் ஒண் பதம் நோக்கி
அம் கண் அரில் வலை உணக்கும் துறைவனொடு
அலரே அன்னை அறியின் இவண் உறை வாழ்க்கை
அரிய ஆகும் நமக்கு எனக் கூறின்
கொண்டும் செல்வர்கொல் தோழி உமணர்
வெண் கல் உப்பின் கொள்ளை சாற்றிக்
கண நிரை கிளர்க்கும் நெடு நெறிச் சகடம்
மணல் மடுத்து உரறும் ஓசை கழனிக்
கருங் கால் வெண் குருகு வெரூஉம்
இருங் கழிச் சேர்ப்பின் தம் உறைவின் ஊர்க்கே. (4)

**புலவர்: அம்மூவனார்**

**திணை: நெய்தல்; கூற்று: தோழி கூற்று**

**கூற்று விளக்கம்: தலைவன் சிறைப்புறத்தானாக தோழி அலர் அச்சம் தோன்றச் சொல்லி வரைவு கடாயது.**

நிலம் நீர் ஆரக் குன்றம் குழைப்ப
அகல் வாய்ப் பைஞ் சுனைப் பயிர் கால்யாப்பக்
குறவர் கொன்ற குறைக் கொடி நறைப் பவர்
நறுங் காழ் ஆரம் சுற்றுவன அகைப்பப்
பெரும் பெயல் பொழிந்த தொழில எழிலி
தெற்கு ஏர்பு இரங்கும் அற்சிரக் காலையும்
அரிதே காதலர்ப் பிரிதல் இன்று செல்
இளையர்த் தரூஉம் வாடையொடு
மயங்கு இதழ் மழைக் கண் பயந்த தூதே. (5)

**புலவர்: பெருங்குன்றூர்கிழார்**

**திணை: குறிஞ்சி; கூற்று: தோழி கூற்று**

**கூற்று விளக்கம்: தலைவன் செலவுக் குறிப்பு அறிந்து வேறுபட்ட தலைவிக்குத் தோழி சொல்லியது.**

சூருடை நனந் தலைச் சுனை நீர் மல்கப்
பெரு வரை அடுக்கத்து அருவி ஆர்ப்பக்
கல் அலைத்து இழிதரும் கடு வரற் கான் யாற்றுக்
கழை மாய் நீத்தம் காடு அலை ஆர்ப்பத்
தழங்கு குரல் ஏறொடு முழங்கி வானம்
இன்னே பெய்ய மின்னுமால் தோழி
வெண்ணெல் அருந்திய வரி நுதல் யானை
தண் நறுஞ் சிலம்பில் துஞ்சும்
சிறியிலைச் சந்தின வாடு பெருங் காட்டே (7)

**புலவர்: நல்வெள்ளியார்**

**திணை: பாலை; கூற்று: தோழி கூற்று**

**கூற்று விளக்கம்: பட்ட பின்றை வரையாது கிழவோன் நெட்டி இடைக் கழிந்து பொருள்வயிற் பிரிய ஆற்றாளாய தலைவிக்குத் தோழி சொல்லியது.**

# குறுந்தொகை

செங்களம் படக்கொன்று அவுணர்த் தேய்த்த
செங்கோள் அம்பின் செங்கோட்டு யானைக்
கழல் தொடிச் சேஎய் குன்றம்
குருதிப் பூவின் குலைக் காந்தட்டே. (1)

**புலவர்: திப்புத்தோளார்**

**திணை: குறிஞ்சி; கூற்று: தோழி கூற்று**

**கூற்று விளக்கம்: பாங்கியற் கூட்டத்தை விரும்பிய தலைமகன் செங்காந்தட் பூவைக் கையுறையாகக் கொடுத்துத் தோழியின்பால் தன்குறை கூறியவழி அவள், ‘இஃது எமது மலையிடத்தும் உள்ளதாதலின் இதனை வேண்டேம்” என்று மறுத்துக் கூறியது.**

அதுகொல் தோழி காம நோயே
வதிகுரு குறங்கும் இன்னிழற் புன்னை
உடைதிரைத் திவலை அரும்புந் தீநீர்
மெல்லம் புலம்பன் பிரிந்தெனப்
பல்லிதழ் உண்கண் பாடொல் லாவே. (5)

**புலவர்: நரிவெரூ உத்தலையார்**

**திணை: நெய்தல்; கூற்று: தலைவி கூற்று**

**கூற்று விளக்கம்: பிரிவாற்றாமையால் தலைவி வருந்துதலையறிந்து கவலையுற்ற தோழிக்கு அவள், தன்கண்கள் துயிலாமையை உணர்த்தும் வாயிலாகக் காமநோயின் கொடுமையைக் கூறியது.**

யாய் ஆகியளே விழவு முதலாட்டி
பயறு போல் இணர பைந்தாது படீஇயர்
உழவர் வாங்கிய கமழ்பூ மென்சினைக்
காஞ்சி யூரன் கொடுமை
கரந்தனள் ஆகலின் நாணிய வருமே. (10)

**புலவர்: ஓரம்போகியார்**

**திணை: பாலை; கூற்று: தோழி கூற்று**

கூற்று விளக்கம்: பரத்தையிற் பிரிந்த தலைவன் மீண்டுவந்து வாயில் வேண்டியவிடத்துத் தோழி, ‘‘ஏற்றுக் கோடற்குத்தகாத கொடுமையை உடையனாயினும் அதனை மனங்கொள்ளாமல், கற்பொழுக்கத்தின் சிறப்பினால் தலைவன் கொடுமையை மறைத்து அவன் நாணும்படி தலைவி தானே அவனை ஏற்றுக்கொள்ள வருகின்றாள்’’ என்று கூறியது.

இருள்திணிந் தன்ன ஈர்ந்தண் கொழுநிழல்
நிலவுக்குவித் தன்ன வெண்மணல் ஒருசிறைக்
கருங்கோட்டுப் புன்னைப் பூம்பொழில் புலம்ப
இன்னும் வாரார் வரூஉம்
பன்மீன் வேட்டத் தென்னையர் திமிலே. (123)

புலவர்: ஐயூர் முடவனார்

திணை: நெய்தல்; கூற்று: தோழி கூற்று

கூற்று விளக்கம்: தலைவன் பகலில் வந்து மறைந்து நிற்க, “தலைவர் இன்னும் பாணிப்பாராயின் நம் தமையன்மார் மீன்வேட்டையினின்றும் திரும்பி வருவாராதலின் அவர் நம்மைக் காண்டலரிது; இப்பொழுதே வருவாராயின் நன்றாகும்” என்னும் கருத்துத் தோன்றத் தோழி தலைவிக்குக் கூறியது.

பணைத்தோட் குறுமகள் பாவை தைஇயும்
பஞ்சாய்ப் பள்ளஞ் சூழ்ந்து மற்றிவள்
உருத்தெழு வனமுலை ஒளிபெற எழுதிய
தொய்பில் காப்போர் அறிதலும் அறியார்
முறையுடை யரசன் செங்கோல் அவையத்
தியான்றற் கடவின் யாங்கா வதுகொல்
பெரிதும் பேதை மன்ற
அளிதோ தானேயிவ் வழுங்கல் ஊரே. (276)

புலவர்: கோழிக் கொற்றனார்

திணை: குறிஞ்சி; கூற்று: தலைவன் கூற்று

கூற்று விளக்கம்: தோழியற் சேட்படுத்தப்பட்டவிடத்துத் தலைவன், “இனி மடல் ஏறிச் சான்றோரறிய வழக்குரைத்துத் தலைவியை மணம்புரிவேன்” என்று தோழி அறியும்படி முன்னிலைப் புறமொழியாகக் கூறியது.

வாழி ஆதன் வாழி அவினி
பால் பல ஊறுக! பகடுபல சிறக்க
என வேட்டோளே யாயே யாமே
வித்திய உழவர் நெல்லோடு பெயரும்
பூக் கஞல் ஊரன் தன் மனை
வாழ்க்கை பொலிக என வேட்டேமே. (3)

**புலவர்: ஓரம்போகியார்**

**திணை: மருதம்; கூற்று: தோழி கூற்று**

**கூற்று விளக்கம்: புறத்தொழுக்கத்திலே நெடுநாளொழுகி, 'இது தகாது' எனத் தெளிந்த மனத்தனாய் மீண்டு தலைவியோடுகூடி ஒழுகா நின்ற தலைமகன் தோழியோடு சொல்லாடி, 'யான் அவ்வாறொழுக நீயிர் நினைத்த திறம் யாது?' என்றாற்கு அவள் சொல்லியது.**

அன்னை வாழிவேண் டன்னை உதுக்காண்
ஏர்கொடிப் பாசடும்பு பரியஊர்பு இழிபு
நெய்தல் மயக்கி வந்தன்று நின்மகள்
பூப்போல் உண்கண் மரீஇய
நோய்க்குமருந் தாகிய கொண்கன் தேரே. (101)

**புலவர்: அம்மூவனார்**

**திணை: நெய்தல்; கூற்று: தோழி கூற்று**

**கூற்று விளக்கம்: அறத்தொடு நின்றபின்னர் வரைதற்பொருட்டுப் பிரிந்த தலைமகன் வரைவோடு புகுந்தவழித் தோழி செவிலிக்குக் காட்டிச் சொல்லியது.**

நறுவடி மாஅத்து மூக்கிறுபு உதிர்ந்த
ஈர்ந்தண் பெருவடுப் பாலையிற் குறவர்
உறைவீழ் ஆலியிற் தொகுக்கும் சாரல்
மீமிசை நன்னாட் டவர்வரின்
யானுயிர் வாழ்தல் கூடும் அன்னாய். (213)

**புலவர்: கபிலர்.**

**திணை: குறிஞ்சி; கூற்று: தலைமகள் கூற்று**

**கூற்று விளக்கம்: 'வரைவொடுவருதலைத் துணிந்தான்' என்பது தோழி கூறக்கேட்ட தலைமகள் சொல்லியது.**

களிறு பிடிதழீஇப் பிற புலம் படராது
பசிதின வருந்தும் பைதறு குன்றத்துச்
சுடர்த்தொடிக் குறுமகள் இனைய
எனைப்பயஞ் செய்யுமோ விடலைநின் செலவே. (305)

**புலவர்: ஓதலாந்தையார்**

**திணை: பாலை; கூற்று: தோழி கூற்று**

**கூற்று விளக்கம்: உடன்போக்கு ஒழிவித்துத் தனித்துச் செல்லலென்ற தலைமகற்குத் தோழி கூறியது.**

மறியிடைப் படுத்த மான்பிணை போலப்
புதல்வ னடுவண் னாக நன்று
மினிது மன்றவ்வா கிடக்கை முனிவின்றி
நீனிற வியலகங் கவைஇய
வீனு மும்பரும் பெறலருங் குரைத்தே. (401)

**புலவர்: பேயனார்**

**திணை: முல்லை; கூற்று: செவிலி கூற்று**

**கூற்று விளக்கம்: கடிமனைச் சென்றுவந்த செவிலி உவந்த உள்ளத்தளாய் நற்றாய்க்குச் சொல்லியது.**

மா ஆடிய புலன் நாஞ்சில் ஆடா
கடா அம் சென்னிய கடுங்கண் யானை
இனம் பரந்த புலம் வளம் பரப்பு அறியா
நின் படைஞர் சேர்ந்த மன்றம் கழுதை போகி
நீ உடன்றோர் மன் எயில் தோட்டி வையா
கடுங்கால் ஒற்றலின் சுடர்சிறந்து உருத்துப்
பசும் பிசிர் ஒள் அழல் ஆடிய மருங்கின்
ஆண்டலை வழங்கும் கான் உணங்கு கடு நெறி
முனை அகன் பெரும் பாழ் ஆக மன்னிய
உரும் உறழ்பு இரங்கு முரசின் பெரு மலை
வரை இழி அருவியின் ஒளிறுகொடி நுடங்கக்
கடும் பரிக் கதழ் சிறகு அகைப்ப நீ
நெடுந் தேர் ஓட்டிய பிறர் அகன் தலை நாடே (25)

**துறை - வஞ்சித்துறைப் பாடாண்பாட்டு**

**வண்ணம் - ஒழுகுவண்ணமும் சொற்சீர்வண்ணமும்.**

**தூக்கு - செந்தூக்கும், வஞ்சித்தூக்கும்.**

**பெயர் - கானுணங்கு கடுநெறி**

வலம் படு முரசின் வாய் வாட் கொற்றத்துப்
பொலம் பூண் வேந்தர் பலர்தில் அம்ம
அறம் கரைந்து வயங்கிய நாவின் பிறங்கிய
உரைசால் வேள்வி முடித்த கேள்வி
அந்தணர் அரும் கலம் ஏற்ப நீர் பட்டு
இருஞ் சேறு ஆடிய மணல் மலி முற்றத்துக்
களிறு நிலை முணைஇய தார் அருந் தகைப்பின்
புறஞ்சிறை வயிரியர்க் காணின் வல்லே
எஃகு படை அறுத்த கொய் சுவற் புரவி

அலங்கும் பாண்டில் இழை அணிந்து ஈம் என
ஆனாக் கொள்கையை ஆதலின் அவ் வயின்
மா இரு விசும்பில் பன்மீன் ஒளி கெட
ஞாயிறு தோன்றியாங்கு மாற்றார்
உறு முரண் சிதைத்த நின் நோன் தாள் வாழ்த்திக்
காண்கு வந்திசின் கழல் தொடி அண்ணல்
மை படு மலர்க் கழி மலர்ந்த நெய்தல்
இதழ் வனப்பு உற்ற தோற்றமொடு உயர்ந்த
மழையினும் பெரும் பயம் பொழிதி அதனால்
பசியுடை ஒக்கலை ஒரீஇய
இசை மேம் தோன்றல் நின் பாசறையானே. (64)

**துறை – காட்சி வாழ்த்து.**

**வண்ணம் – ஒழுகுவண்ணம், தூக்கு - செந்தூக்கு**

**பெயர் - உரைசால் வேள்வி**

கொடுமணம் பட்ட நெடுமொழி ஒக்கலொடு
பந்தர்ப் பெயரிய பேர் இசை மூதூர்க்
கடன் அறி மரபின் கை வல் பாண!
தெண் கடல் முத்தமொடு நன் கலம் பெறுகுவை
கொல் படை தெரிய வெல் கொடி நுடங்க
வயங்கு கதிர் வயிரொடு வலம்புரி ஆர்ப்பப்
பல் களிற்று இன நிரை புலம் பெயர்ந்து இயல்வர
அமர்க்கண் அமைந்த அவிர் நிணப் பரப்பின்
குழூஉச் சிறை எருவை குருதி ஆரத்
தலை துமிந்து எஞ்சிய ஆண் மலி யூபமொ
உரு இல் பேய்மகள் கவலை கவற்ற
நாடுடன் நடுங்கப் பல்செருக் கொன்று
நாறு இணர்க் கொன்றை வெண் போழ்க் கண்ணியர்
வாள் முகம் பொறித்த மாண் வரி யாக்கையர்

நெறி படு மருப்பின் இருங்கண் மூரியொடு
வளை தலை மாத்த தாழ் கரும் பாசவர்
எஃகு ஆடு உனம் கடுப்ப மெய் சிதைந்து
சாந்து எழில் மறைத்த சான்றோர் பெருமகன்
மலர்ந்த காந்தள் மாறாது ஊதிய
கடும் பறைத் தும்பி சூர் நசைத்தா அய்ப்
பறை பண் அழியும் பாடுகால் நெடுவரைக்
கல் உயர் நேரிப் பொருநன்
செல்வக் கோமாற் பாடினை செலினே. (67)

**துறை - பாணாற்றுப்படை**

**வண்ணம் – ஒழுகுவண்ணம், தூக்கு - செந்தூக்கு**

**பெயர் - வெண்போழ்க் கண்ணி**

# பரிபாடல்

திரை இரும் பனிப்பௌவம் செவ்விதா அற முகந்து
உர உரும் உடன்று ஆர்ப்ப ஊர் பொறை கொள்ளாது
கரை உடை குளமெனக் கழன்று வான் வயிறு அழிபு
வரைவரை தொடுத்த வயங்கு வெள் அருவி
இரவு இருள் பகலாக இடம் அரிது செலவு என்னாது
வலன் இரங்கு முரசின் தென்னவர் உள்ளிய
நிலன் உற நிமிர் தானை நெடு நிரை நிவப்பு அன்ன
பெயலான் பொலிந்து பெரும்புனல் பலநந்த
நலன் நந்த நாடு அணி நந்த புலன் நந்த
வந்தன்று வையைப் புனல்.
நளி இருஞ் சோலை நரந்தம் தாஅய்
ஒளிர் சினை வேங்கை விரிந்த இணர் உதிரலொடு
துளியின் உழந்த தோய்வு அருஞ் சிமை தொறும்
வளி வாங்கு சினைய மாமரம் வேர் கீண்டு
உயர்ந்துழி உள்ளன பயம்பிடைப் பரப்பி
உழவர் களி தூங்க முழவு பணை முரல
ஆடல் அறியா அரிவை போலவும்
ஊடல் அறியா உவகையள் போலவும்
வேண்டு வழி நடந்து, தாங்கு தடை பொருது
விதி ஆற்றான் ஆக்கிய மெய்க் கலவை போலப்
பொது நாற்றம் உள்உள் கரந்து புது நாற்றம்
செய்கின்றே செம்பூம் புனல்.
கவிழ்ந்த புனலின் கயம் தண் கழுநீர்
அவிழ்ந்த மலர் மீதுற்றென ஒருசார்
மாதர் மடநல்லார் மணலின் எழுதிய
பாவை சிதைத்தது என அழ ஒருசார்

அகவயல் இள நெல் அரிகால் சூடு
தொகு புனல் பரந்தெனத் துடிபட ஒருசார்
ஓதம் சுற்றியது ஊர் என ஒருசார்
கார் தூம்பு அற்றது வான் என ஒருசார்
பாடுவார் பாக்கம் கொண்டென
ஆடுவார் சேரி அடைந்தெனக்
கழனி வந்து கால் கோத்தெனப்
பழன வாளை பாளை உண்டென
வித்து இடு புலம் மேடு ஆயிற்றென
உணர்த்த உணரா ஒள் இழை மாதரைப்
புணர்த்திய இச்சத்துப் பெருக்கத்தின் துனைந்து
சினை வளர் வாளையின் கிளையடு கெழீஇப்
பழன உழவர் பாய் புனல் பரத்தந்து
இறு வரை புரையுமாறு இருகரை ஏமத்து
வரை புரை உருவின் நுரை பல சுமந்து
பூ வேய்ந்து பொழில் பரந்து
துனைந்து ஆடுவார் ஆய் கோதையர்
அலர் தண் தாரவர் காதில்
தளிர் செரீஇ கண்ணி பறித்துக்
கைவளை ஆழி தொய்யகம் புனை துகில்
மேகலை காஞ்சி வாகுவலயம்
எல்லாம் கவரும் இயல்பிற்றாய்த் தென்னவன்
ஒன்னார் உடைபுலம் புக்கற்றால் மாறுஅட்ட
தானையான் வையை வனப்பு.
புரிந்த தகையினான் யாறு ஆடுவாருள்
துரந்து புனல் தூவத் தூமலர்க் கண்கள்
அமைந்தன ஆங்கண் அவருள் ஒருத்தி
கை புதைஇய வளை

ஏக்கழுத்து நாணான் கரும்பின் அணை மென் தோள்
போக்கிச் சிறைப்பிடித்தாள் ஓர் பொன் அம் கொம்பு
பரிந்து அவளைக் கைப்பிணை நீக்குவான் பாய்வாள்
இரும்பு ஈர் வடி ஒத்து மை விளங்கும் கண் ஒளியால்
செம்மைப் புதுப் புனல் சென்று இருளாயிற்றே
வையைப் பெருக்கு வடிவு.
விரும்பிய ஈரணி மெய் ஈரம் தீரச்
சுரும்பு ஆர்க்கும் சூர் நறா ஏந்தினாள் கண் நெய்தல்
பேர் மகிழ் செய்யும் பெரு நறாப் பேணியவே
கூர் நறா ஆர்ந்தவள் கண்.
கண் இயல் கண்டு ஏத்திக் காரிகை நீர் நோக்கினைப்
பாண் ஆதரித்துப் பல பாட அப்பாட்டுப்
பேணாது ஒருத்தி பேதுற ஆயிடை
என்னை வருவது எனக்கு என்று, இனையா
நன் ஞெமர் மார்பன் நடுக்குற நண்ணிச்
சிகை கிடந்த ஊடலின் செங்கண் சேப்பு ஊர
வகை தொடர்ந்த ஆடலுள் நல்லவர் தம்முள்
பகை தொடர்ந்து கோதை பரியூஉ நனிவெகுண்டு
யாறு ஆடு மேனி அணி கண்ட தன் அன்பன்
சேறு ஆடு மேனி திருநிலத்து உய்ப்பச் சிரம் மிதித்துத்
தீர்விலதாகச் செருவுற்றாள் செம்புனல்
ஊருடன் ஆடுங்கடை.
புரி நரம்பு இன் கொளைப் புகல் பாலை ஏழும்
எழூஉப் புணர் யாழும் இசையும் கூடக்
குழல் அளந்து நிற்ப முழவு எழுந்து ஆர்ப்ப
மன் மகளிர் சென்னியர் ஆடல் தொடங்கப்
பொருது இழி வார் புனல் பொற்பு அஃது
உரும் இடி சேர்ந்த முழக்கம் புரையும்

திருமருத முன்துறை சேர் புனற்கண் துய்ப்பார்
தாமம் தலை புனை பேளம் நீர் வையை
நின்பயம் பாடி விடிவுற்று ஏமாக்க
நின் படிந்து நீங்காமை இன்று புணர்ந்தெனவே. (7)

**புலவர்: மையோடக் கோவனார்**

**திணை: மருதம்**

**கூற்று: தோழி கூற்று**

**கூற்று விளக்கம்: தலைமகன் தலைமகளோடு புனலாடினானெனக் கேட்டு இன்புற்ற செவிலித்தாய் தோழியை நீங்களாடிய புனலணியின்பம் கூறுகென்றாட்கு அப்புனலணி யின்பமும் பல்வேறு வகைப்பட்ட இன்பமும் தலைமகன் காதன்மையுங் கூறி என்றும் இந்த நீரணியின்பம் பெறுகயாமென்றது.**

# கலித்தொகை

இடுமுள் நெடுவேலி போல கொலைவர்
கொடுமரம் தேய்த்தார் பதுக்கை நிரைத்த
கடுநவை ஆர் ஆற்று அறுசுனை முற்றி
உடங்குநீர் வேட்ட உடம்பு உயங்கு யானை
கடுந்தாம் பதிபு ஆங்குக் கை தெறப்பட்டு
வெறிநிரை வேறாகச் சார் சாரல் ஓடி
நெறி மயக்குற்ற நிரம்பா நீடு அத்தம்
சிறு நனி நீ துஞ்சி ஏற்பினும் அஞ்சும்
நறுநுதல் நீத்துப் பொருள்வயிற் செல்வோய்
உரனுடை உள்ளத்தை செய் பொருள் முற்றிய
வளமையான் ஆகும் பொருள் இது என்பாய்
இளமையும் காமமும் நின்பாணி நில்லா
இடைமுலைக் கோதை குழைய முயங்கும்
முறைநாள் கழிதல் உறாஅமைக் காண்டை
கடை நாள் இது என்று அறிந்தாரும் இல்லைப்
போற்றாய் பெரும நீ காமம் புகர்பட
வேற்றுமைக் கொண்டு பொருள் வயிற் போகுவாய்
கூற்றமும் மூப்பும் மறந்தாரோடு ஓராஅங்கு
மாற்றுமைக் கொண்ட வழி. (12)

**புலவர்: பாலைபாடிய பெருங்கடுங்கோ**

**திணை: பாலை; கூற்று: தோழிக் கூற்று**

**கூற்று விளக்கம்: தலைமகனாற் பிரிவுணர்த்தப்பட்ட தோழி காட்டது கடுமையுந் தலைவியது மென்மையும் "நாளது சின்மையும் இளமையதருமையுந் தாளாண்பக்கமுந் தகுதியதமையும் அன்பினதகலமும் அகற்சியதருமையுங்" கூறிச் செலவழுங்குவித்தது.**

கயமலர் உண்கண்ணாய் காணாய் ஒருவன்
வயமான் அடித்தேர்வான் போலத் தொடை மாண்ட

கண்ணியன் வில்லன் வரும் என்னை நோக்குபு
முன்னத்தின் காட்டுதல் அல்லது தான் உற்ற
நோய் உரைக்கல்லான் பெயரும்மன் பல்நாளும்
பாயல்பெறேஎன் படர்கூர்ந்து அவன்வயின்
சேயேன்மன் யானும் துயர் உழப்பேன் ஆயிடைக்
கண்நின்று கூறுதல் ஆற்றான் அவனாயின்
பெண் அன்று உரைத்தல் நமக்காயின் இன்னதூஉம்
காணான் கழிதலும் உண்டு என்று ஒருநாள் என்
தோள் நெகிழ்பு உற்ற துயரால் துணிதந்து ஓர்
நாண் இன்மை செய்தேன் நறுநுதால் ஏனல்
இனக்கிளியாம் கடிந்து ஓம்பும் புனத்து அயல்
ஊசல் ஊர்ந்து ஆட ஒரு ஞான்று வந்தானை
ஐய சிறிது என்னை ஊக்கி எனக் கூறத்
தையால் நன்று என்று அவன் ஊக்கக் கைநெகிழ்பு
பொய்யாக வீழ்ந்தேன் அவன் மார்பின் வாயாச் செத்து
ஒய்யென ஆங்கே எடுத்தனன் கொண்டான் மேல்
மெய் அறியாதேன் போல் கிடந்தேன் மன் ஆயிடை
மெய் அறிந்து ஏற்று எழுவேனாயின் மற்று ஒய்யென
ஒண்குழாய் செல்க எனக்கூறி விடும்பண்பின்
அங்கண் உடையன் அவன். (37)

**புலவர்: கபிலர்**

**திணை: குறிஞ்சி; கூற்று: தோழி கூற்று.**

**கூற்று விளக்கம்: "நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும் செய்வினை மறைப்பினும் செலவினும் பயில்வினும் புணர்ச்சி எதிர்பாடுள்ளுறுத்து வரூஉம் உணர்ச்சி ஏழினும் உணர்ந்த பின்றை"த் தன்னை அவன் மறையாமை காரணமாக "மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது பல்வேறு கவர்பொருள் நாட்டத்தாற்" தலைமகட்குத் தோழி கூறியது.**

நலம் மிக நந்திய நய வரு தட மென் தோள்

அலமரல் அமர் உண் கண் அம் நல்லாய் நீ உறீஇ
உலமரல் உயவு நோய்க்கு உய்யும் ஆறு உரைத்துச் செல்;
பேர் ஏமுற்றார் போல முன் நின்று விலக்குவாய்
யார் எல்லா நின்னை அறிந்ததூ உம் இல் வழி;
தளிர் இயால் என் அறிதல் வேண்டின் பகை அஞ்சாப்
புல் இனத்து ஆயர் மகனேன் மற்று யான்;
ஒக்கும் மன்;
புல் இனத்து ஆயனை நீ ஆயின் குடம் சுட்டு
நல் இனத்து ஆயர் எமர்;
எல்லா
நின்னொடு சொல்லின் ஏதமோ இல்லை மன்;
ஏதம் அன்று எல்லை வருவான் விடு;
விடேன்,
உடம்பட்டு நீப்பார் கிளவி மடம் பட்டு
மெல்லிய ஆதல் அறியினும் மெல்லியால்
நின் மொழி கொண்டு,யானோ விடுவேன் மற்று என் மொழி கொண்டு
என் நெஞ்சம் ஏவல் செயின்;
நெஞ்சு ஏவல் செய்யாது என நின்றாய்க்கு எஞ்சிய
காதல் கொள் காமம் கலக்குற ஏதிலார்
பொய்ம் மொழி தேறுவது என்
தெளிந்தேன் தெரி இழாய் யான்;
பல் கால் யாம் கான் யாற்று அவிர் மணல் தண் பொழில்
அல்கல் அகல் அறை ஆயமொடு ஆடி
முல்லை குருந்தொடு முச்சி வேய்ந்து எல்லை
இரவு உற்றது இன்னும் கழிப்பி அரவு உற்று
உருமின் அதிரும் குரல் போல் பொரு முரண்
நல் ஏறு நாகு உடன் நின்றன
பல் ஆன் இன நிரை நாம் உடன் செலற்கே. (113)

புலவர்: சோழன் நல்லுருத்திரன்

திணை: முல்லை; கூற்று: தலைமகன் கூற்று.

கூற்று விளக்கம்: வினைவலபாங்கிற் தலைவியை ஆற்றிடைக் கண்டு அவளை வினைவலபாங்கிற் தலைவன் விலக்கி அவளோடு சிறிது கூறியவழி அவள் கூட உடம்பட்டாளாக அவன் கூறியது.

நுதலும் நுண்பசப்பு இவரும் தோளும்

அகல்மலை இறும்பின் ஆய்ந்துகொண்டு அறுத்த

பணைஎழில் அழிய வாடும் நாளும்

நினைவல் மாதுஅவர் பண்பு என்று ஓவாது

இனையல் வாழி தோழி புணர்வர்

இலங்குகோல் ஆய்தொடி நெகிழப் பொருள்புரிந்து

அலந்தலை ஞெமையத்து அதர்அடைந் திருந்த

மால்வரைச் சீறூர் மருள்பல் மாக்கள்

கோள்வல் ஏற்றை ஓசை ஓர்மார்

திருத்திக் கொண்ட அம்பினர் நோன்சிலை

எருத்தத்து இரீஇ இடந்தொறும் படர்தலின்

கீழ்ப்படு தாரம் உண்ணா மேற்சினைப்

பழம் போற் சேற்ற தீம்புழல் உணீஇய

கருங்கோட்டு இருப்பை ஊரும்

பெருங்கை எண்கின் சுரன்இறந் தோரே. (171)

**புலவர்: கல்லாடனார்**

**திணை: பாலை; கூற்று: தோழி கூற்று**

**கூற்று விளக்கம்: தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறீஇயது.**

நகைநீ கோளாய் தோழி அல்கல்

வயநாய் எறிந்து வன்பறழ் தழீஇ

இளையர் எய்துதல் மடக்கிக் கிளையொடு

நான்முலைப் பிணவல் சொலியக் கான் ஒழிந்து

அரும்புழை முடுக்கர் ஆள்குறித்து நின்ற

தறுகட் பன்றி நோக்கிக் கானவன்

குறுகினன் தொடுத்த கூர்வாய்ப் பகழி

மடைசெலல் முன்பின்தன் படைசெலச் செல்லாது

அருவழி விலக்கும்எம் பெருவிறல் போலும் என
எய்யாது பெயரும் குன்ற நாடன்
செறிஅரில் துடக்கலின் பரீஇப் புரிஅவிழ்ந்து
ஏந்துகுவவு மொய்ம்பிற் பூச்சோர் மாலை
ஏற்றுஇமில் கயிற்றின் எழில்வந்து துயல்வர
இல்வந்து நின்றோற் கண்டனள் அன்னை
வல்லே என்முகம் நோக்கி
நல்லை மன் என நகூஉப் பெயர்ந் தோளே. (248)

**புலவர்: கபிலர்**

**திணை: குறிஞ்சி; கூற்று: தோழி கூற்று**

**கூற்று விளக்கம்: இரவுக்குறிச் சிறைப்புறமாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தலைமகள் கேட்பத் தோழி சொல்லியது.**

மாதிரம் புதையப் பாஅய்க் கால்வீழ்த்து
ஏறுடைப் பெருமழை பொழிந்தென அவல்தோறு
ஆடுகளப் பறையின் வரிநுணல் கறங்க
ஆய்பொன் அவிர்இழை தூக்கி யன்ன
நீடிணர்க் கொன்றை கவின்பெறக் காடுடன்
சுடர்புரை தோன்றிப் புதல்தலைக் கொளாஅ
முல்லை இல்லமொடு மலரக் கல்ல
பகுவாய்ப் பைஞ்சுனை மாவுண மலிரக்
கார்தொடங் கின்றே காலை காதலர்
வெஞ்சின வேந்தன் வியன்பெரும் பாசறை
வென்றி வேட்கையொடு நம்மும் உள்ளார்
யாதுசெய் வாங் கொல் தோழி நோதகக்
கொலைகுறித் தன்ன மாலை
துனைதரு போழ்தின் நீந்தலோ அரிதே. (364)

**புலவர்: மதுரை மருதங்கிழார் மகனார் பெருங்கண்ணனார்**

**திணை: முல்லை; கூற்று: தலைமகள்**

**கூற்று விளக்கம்: பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது**

ஆரம் தாழ்ந்த அணிகிளிர் மார்பின்
தாள்தோய் தடக்கைத் தகைமாண் வழுதி
வல்லை மன்ற நீநயந் தளித்தல்
தேற்றாய் பெரும பொய்யே என்றும்
காய்சினம் தவிராது கடல்ஊர்பு எழுதரும்
ஞாயிறு அனையை நின் பகைவர்க்குத்
திங்கள் அனையை எம்ம னோர்க்கே. (59)

**பாடியவர்: மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்**

**பாடப்பட்டோன்: பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன்**

**திணை: பாடாண். துறை: பூவைநிலை.**

மன்பதை காக்கும்நின் புரைமை நோக்காது
அன்புகண் மாறிய அறனில் காட்சியொடு
நும்ம னோரும்மற்று இனையர் ஆயின்
எம்மனோர் இவண் பிறவலர் மாதோ
செயிர்தீர் கொள்கை எம்வெங் காதலி
உயிர்சிறிது உடையள் ஆயின் எம்வயின்
உள்ளாது இருத்தலோ அரிதே அதனால்
அறனில் கூற்றம் திறனின்று துணியப்
பிறனா யினன்கொல் இறீஇயர் என் உயிர் என
நுவல்வுறு சிறுமையள் பலபுலந்து உறையும்
இடுக்கண் மனையோள் தீரிய இந்நிலை
விடுத்தேன் வாழியர் குருசில் உதுக்காண்
அவல நெஞ்சமொடு செல்வல் நிற் கறுத்தோர்
அருங்கடி முனையரண் போலப்
பெருங்கை யற்றஎன் புலம்புமுந் துறத்தே. (210)

பாடியவர்: பெருங்குன்றூர் கிழார்

பாடப்பட்டோன்: சேரமான் குடக்கோச் சேரல் இரும்பொறை

திணை: பாடாண்: துறை: பரிசில் கடாநிலை

ஏர் பரந்த வயல் நீர் பரந்த செறுவின்
நெல் மலிந்த மனைப் பொன் மலிந்த மறுகின்
படுவண்டு ஆர்க்கும் பன்மலர்க் காவின்
நெடுவேள் ஆதன் போந்தை அன்ன
பெருஞ்சீர் அருங்கொண் டியளே கருஞ்சினை
வேம்பும் ஆரும் போந்தையும் மூன்றும்
மலைந்த சென்னியர் அணிந்த வில்லர்
கொற்ற வேந்தர் வரினும் தன்தக
வணங்கார்க்கு ஈகுவன் அல்லன்  வண் தோட்டுப்
பிணங்கு கதிர்க் கழனி நாப்பண் ஏமுற்று
உணங்குகலன் ஆழியின் தோன்றும்
ஓர்எயில் மன்னன் ஒருமட மகளே. (338)

பாடியவர்: குன்றூர் கிழார் மகனார்

திணை: காஞ்சி; துறை: மகட்பாற் காஞ்சி

வைந்நுதி பொருத வடுவாழ் வரிநுதல்
வாடா மாலை ஓடையொடு துயல்வரப்
படுமணி இரட்டும் மருங்கின் கடுநடைக்
கூற்றத்து அன்ன மாற்றரு மொய்ம்பின்
கால்கிளர்ந் தன்ன வேழ மேல்கொண்டு
ஐவேறு உருவின் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
மின்உறழ் இமைப்பின் சென்னிப் பொற்ப
நகைதாழ்பு துயல்வரூஉம் வகையமை பொலங்குழை
சேண்விளங்கு இயற்கை வாண்மதி கவைஇ
அகலா மீனின் அவிர்வன இமைப்ப (திருமுருகாற்றுப்படை, 78-88)

ஓங்கு திரை வியன் பரப்பின்
ஒலி முந்நீர் வரம் பாகத்
தேன் தூங்கும் உயர் சிமைய
மலை நாறிய வியன் ஞாலத்து
வல மாதிரத்தான் வளி கொட்ப
விய னாண்மீ னெறி ஒழுகப்
பகற் செய்யும் செஞ் ஞாயிறும்
இரவுச் செய்யும் வெண் திங்களும்
மை தீர்ந்து கிளர்ந்து விளங்க
மழைதொழில் உதவ மாதிரங் கொழுக்கத்
தொடுப்பின் ஆயிரம் வித்தியது விளைய
நிலனு மரனும் பயன்எதிர்பு நந்த
நோ யிகந்து நோக்கு விளங்க
மேதக மிகப் பொலிந்த
ஓங்கு நிலை வயக் களிறு

கண்டு தண்டாக் கட்கின் பத்து
உண்டு தண்டா மிகுவளத் தான்
உயர் பூரிம விழுத் தெருவிற்
பொய் யறியா வாய்மொழி யாற்
புகழ் நிறைந்த நன்மாந்த ரொடு **(மதுரைக்காஞ்சி 1-20)**

திருமழை தலைஇய இருணிற விசும்பின்
விண்ணதிர் இமிழிசை கடுப்பப் பண்ணமைத்துத்
திண்வார் விசித்த முழவொ டாகுளி
நுண்ணுருக் குற்ற விளங்கடர்ப் பாண்டில்
மின்னிரும் பீலி அணித்தழைக் கோட்டொடு
கண்ணிடை விடுத்த களிற்றுயிர்த் தூம்பின்
இளிப்பயிர் இமிரும் குறும்பரந் தூம்பொடு
விளிப்பது கவரும் தீங்குழல் துதைஇ
நடுவுநின் றிசைக்கும் அரிக்குரல் தட்டை
கடிகவர் பொலிக்கும் வல்வாய் எல்லரி
நொடிதரு பாணிய பதலையும் பிறவும்
கார்கோட் பலவின் காய்த்துணர் கடுப்ப
நேர்சீர் சுருக்கிக் காய கலப்பையிர்
கடுக்கலித் தெழுந்த கண்ணகன் சிலம்பில்
படுத்துவைத் தன்ன பாறை மருங்கின்
எடுத்துநிறுத் தன்ன இட்டருஞ் சிறுநெறி
தொடுத்த வாளியர் துணைபுணர் கானவர்
இடுக்கண் செய்யா தியங்குநர் இயக்கும்
அடுக்கல் மீமிசை அருப்பம் பேணாது
இடிச்சுர நிவப்பின் இயவுக்கொண் டொழுகி **(மலைபடுகடாம், 1-20)**

# பதினெண் கீழ்க்கணக்கு

நரை வரும் என்று எண்ணி நல் அறிவாளர்
குழவியிடத்தே துறந்தார் புரை தீரா
மன்னா இளமை மகிழ்ந்தாரே கோல் ஊன்றி
இன்னாங்கு எழுந்திருப்பார் (நாலடியார், 11)

கம்மம் செய் மாக்கள் கருவி ஒடுக்கிய
மம்மர் கொள் மாலை மலர் ஆய்ந்து பூ தொடுப்பாள்
கை மாலை இட்டும் கலுழ்ந்தாள் துணை இல்லார்க்கு
இ மாலை என் செய்வது என்று (நாலடியார், 393)

முதுமக்கள் அன்றி முனி தக்கார் ஆய
பொதுமக்கள் பொல்லா ஒழுக்கம் அது மன்னும்
குன்றத்து வீழும் கொடி அருவி நல் நாட
மன்றத்து மையல் சேர்ந்தற்று (பழமொழி நானூறு, 120)

தன் பயம் தூக்காரைச் சார்தலும் தான் பயவா
நன் பயம் காய்வின்கண் கூறலும் பின் பயவாக்
குற்றம் பிறர் மேல் உரைத்தலும் - இம் மூன்றும்
தெற்றெனவு இல்லார் தொழில் (திரிகடும், 54)

ஆற்றல் இலாதான் பிடித்த படைஇன்னா
நாற்றம் இலாத மலரின் அழகுஇன்னா
தேற்றம் இலாதான் துணிவுஇன்னா வாங்கின்னா
மாற்றம் அறியான் உரை. (இன்னா நாற்பது, 7)

சிற்றாள் உடையான் படைக்கல மாண்புஇனிதே
நட்டார் உடையான் பகையாண்மை முன்இனிதே
எத்துணையும் ஆற்ற இனிதுஎன்ப பால்படும்
கற்றா உடையான் விருந்து. (இனியவை நாற்பது, 38)

கொல்லைப் புனத்த அகில்சுமந்து கல்பாய்ந்து
வானின் அருவி ததும்பக் கவினிய
நாடன் நயமுடையன் என்பதனால் நீப்பினும்
வாடல் மறந்தன தோள் **(ஐந்திணை எழுபது, 14)**

முப்பாலை வீழ்வார் விலங்கார் செறும்பாவை
முப்பால் மயக் (கு) ஏழ் பிறப்பாகி - எப்பாலும்
மெய்ப்பொருள் தேறார் வெளிஓரார் யாண்டைக்கும்
பொய்ப்பாலை உய்வாய்ப் போந்து **(இன்னிலை, 40)**

செல்வந் தரல்வேண்டிச் சென்றநம் காதலர்
வல்லே வருத றெளிந்தாம் வயங்கிழாய்
முல்லை யிலங்கெயி றீன நறுந்தண்கார்
மெல்ல வினிய நகும் **(கார்நாற்பது, 14)**

எவ்வாயு மோடி வயவர் துணித்திட்ட
கைவாயிற் கொண்டெழுந்த செஞ்செவிப் புன்சேவ
லைவாய் வயநாகங் கவ்வி விசும்பிவருஞ்
செவ்வா யுவணத்திற் றோன்றும் புனனாடன்
றெவ்வரை யட்ட களத்து **(களவழி நாற்பது, 26)**

# சிலப்பதிகாரம்

நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
தமிழ்வரம்பு அறுத்த தண்புனல் நல்நாட்டு
மாட மதுரையும் பீடுஆர் உறந்தையும்
கலிகெழு வஞ்சியும் ஒலிபுனல் புகாரும்
அரைசுவீற் றிருந்த உரைசால் சிறப்பின்
மன்னன் மாரன் மகிழ்துணை ஆகிய
இன்இள வேனில் வந்தனன் இவண்என
வளம்கெழு பொதியில் மாமுனி பயந்த
இளங்கால் தூதன் இசைத்தனன் ஆதலின்
மகர வெல்கொடி மைந்தன் சேனை
புகர்அறு கோலம் கொள்ளும் என்பது போல்
கொடிமிடை சோலைக் குயிலோன் என்னும்
படையுள் படுவோன் பணிமொழி கூற
மடல்அவிழ் கானல் கடல்விளை யாட்டினுள்
கோவலன் ஊடக் கூடாது ஏகிய
மாமலர் நெடுங்கண் மாதவி விரும்பி
வானுற நிவந்த மேல்நிலை மருங்கின்
வேனில் பள்ளி ஏறி மாண்இழை

**(சிலப்பதிகாரம், புகார்க்காண்டம், வேனிற்காதை, 1-11)**

ஆய்பொன் னரிச்சிலம்பும் சூடகமும் மேகலையும் ஆர்ப்ப வார்ப்ப
மாயஞ்செய் வாளவுணர் வீழ நங்கை மரக்கான்மேல் வாளமலை யாடும் போலும்
மாயஞ்செய் வாளவுணர் வீழ நங்கை மரக்கான்மேல் வாளமலை யாடுமாயின்
காயாமலர்மேனி யேத்தி வானோர் கைபெய் மலர்மாரி காட்டும் போலும்;
உட்குடைச் சீறூ ரொருமகன் ஆனிரைகொள்ள உற்ற காலை
வெட்சி மலர்புனைய வெள்வா ளுழத்தியும் வேண்டும் போலும்
வெட்சி மலர்புனைய வெள்வா ளுழத்தியும் வேண்டின் வேற்றூர்க்

கட்சியுட் காரி கடிய குரலிசைத்துக் காட்டும் போலும்
கள்விலை யாட்டி மறுப்பப் பொறாமறவன் கைவில் ஏந்திப்
புள்ளும் வழிப்படரப் புல்லார் நிரைகருதிப் போகும் போலும்
புள்ளும் வழிப்படரப் புல்லார் நிரைகருதிப் போகுங் காலைக்
கொள்ளுங் கொடியெடுத்துக் கொற்றவையும் கொடுமரமுன் செல்லும்போலும்

**(சிலப்பதிகாரம், மதுரைக்காண்டம், வேட்டுவ வரி, உரைப்பாட்டுமடை)**

நிலந்தரு திருவின் நிழல்வாய் நேமி
கடம்பூண் டுருட்டும் கௌரியர் பெருஞ்சீர்க்
கோலின் செம்மையும் குடையின் தண்மையும்
வேலின் கொற்றமும் விளங்கிய கொள்கைப்
பதியெழு வறியாப் பண்புமேம் பட்ட
மதுரை மூதூர் மாநகர் கண்டாங்கு
அறந்தரு நெஞ்சின் அறவோர் பல்கிய
புறஞ்சிறை மூதூர்ப் பொழிலிடம் புகுந்து
தீதுதீர் மதுரையும் தென்னவன் கொற்றமும்
மாதவத் தாட்டிக்குக் கோவலன் கூறுழித்
தாழ்நீர் வேலித் தலைச்செங் கானத்து
நான்மறை முற்றிய நலம்புரி கொள்கை
மாமறை முதல்வன் மாடலன் என்போன்
மாதவ முனிவன் மலைவலங் கொண்டு
குமரியம் பெருந்துறை கொள்கையிற் படிந்து
தமர்முதற் பெயர்வோன் தாழ்பொழி லாங்கண்
வகுந்துசெல் வருத்தத்து வான்றுயர் நீங்கக்
கவுந்தி இடவயிற் புகுந்தோன் தன்னைக்
கோவலன் சென்று சேவடி வணங்க

**(சிலப்பதிகாரம், மதுரைக்காண்டம், அடைக்கலக்காதை, 1-19)**

## மணிமேகலை

நாவல் ஓங்கிய மா பெருந் தீவினுள்
காவல் தெய்வதம் தேவர்கோற்கு எடுத்த
தீவகச் சாந்தி செய்தரு நல் நாள்
மணிமேகலையொடு மாதவி வாராத்
தணியாத் துன்பம் தலைத்தலை மேல் வர
சித்திரா பதிதான் செல்லல் உற்று இரங்கித்
தத்தரி நெடுங் கண் தன் மகள் தோழி
வயந்த மாலையை வருக எனக் கூஉய்ப்
பயம் கெழு மா நகர் அலர் எடுத்து உரை என
வயந்த மாலையும் மாதவி துறவிக்கு
அயர்ந்து, மெய் வாடிய அழிவினள் ஆதலின்
மணிமே கலையொடு மாதவி இருந்த
அணி மலர் மண்டபத்து அகவயின் செலீஇ
ஆடிய சாயல் ஆய் இழை மடந்தை
வாடிய மேனி கண்டு உளம் வருந்திப்
பொன் நேர் அனையாய்! புகுந்தது கேளாய்!
உன்னோடு இவ் ஊர் உற்றது ஒன்று உண்டுகொல்
வேத்தியல் பொதுவியல் என்று இரு திறத்துக்
கூத்தும் பாட்டும் தூக்கும் துணிவும்
பண் யாழ்க் கரணமும் பாடைப் பாடலும்

**(மணிமேகலை, ஊரலர் உரைத்த காதை, 1-20)**

ஆங்கு அவற்கு ஒரு நாள் அம்பலப் பீடிகைப்
பூங் கொடி நல்லாய் புகுந்தது கேளாய்
மாரி நடுநாள் வல் இருள் மயக்கத்து
ஆர் இடை உழந்தோர் அம்பலம் மரீஇத்
துயில்வோன் தன்னைத் தொழுதனர் ஏத்தி

வயிறு காய் பெரும்பசி மலைக்கும் என்றலும்
ஏற்றூண் அல்லது வேற்றூண் இல்லோன்
ஆற்றுவது காணான் ஆர் அஞர் எய்த
கேளிது மாதோ கெடுகநின் தீது என
யாவரும் ஏத்தும் இருங்கலை நியமத்துத்
தேவி சிந்தா விளக்குத் தோன்றி
ஏடா அழியல் எழுந்து இது கொள்ளாய்
நாடு வறம் கூரினும் இவ் ஓடு வறம் கூராது
வாங்குநர் கைஅகம் வருந்துதல் அல்லது
தான் தொலைவு இல்லாத் தகைமையது என்றே
தன் கைப் பாத்திரம் அவன் கைக் கொடுத்தலும்
சிந்தாதேவி செழுங்கலை நியமத்து
நந்தா விளக்கே நாமிசைப் பாவாய்
வானோர் தலைவி மண்ணோர் முதல்வி
ஏனோர் உற்ற இடர் களைவாய் என

**(மணிமேகலை, பாத்திரமரபு கூறிய காதை, 1-20)**

ஆங்கு தாயரோடு அறவணர்த் தேர்ந்து
வாங்கு வில் தானை வானவன் வஞ்சியின்
வேற்று மன்னரும் உழிஞை வெம் படையும்
போல் புறம் சுற்றிய புறக்குடி கடந்து
சுருங்கைத் தூம்பின் மனைவளர் தோகையர்
கருங் குழல் கழீஇய கலவை நீரும்
எந்திர வாவியில் இளைஞரும் மகளிரும்
தம் தமில் ஆடிய சாந்து கழி நீரும்
புவி காவலன் தன் புண்ணிய நல் நாள்
சிவிறியும் கொம்பும் சிதறு விரை நீரும்
மேலை மாதவர் பாதம் விளக்கும்
சீல உபாசகர் செங்கை நறு நீரும்

அறம் செய் மாக்கள் அகில் முதல் புகைத்து
நிறைந்த பந்தல் தசும்பு வார் நீரும்
உறுப்பு முரண் உறாமல் கந்த உத்தியினால்
செறித்து அரைப்போர் தம் செழுமனை நீரும்
என்று இந் நீரே எங்கும் பாய்தலின்
கன்றிய கராமும் இடங்கரும் மீன்களும்
ஒன்றிய புலவு ஒழி உடம்பின ஆகி
தாமரை குவளை கழுநீர் ஆம்பல் **(மணிமேகலை, கச்சிமாநகர் புக்க காதை, 1-20)**

## முத்தொள்ளாயிரம்

கொடிமதில் பாய்ந்திற்ற கோடும் அரசர்
முடியிடறித் தேய்ந்த நகமும் - பிடிமுன்பு
பொல்லாமை நாணிப் புறங்கடை நின்றதே
கல்லார்தோட் கிள்ளி களிறு. (23)

எலாஅ மடப்பிடியே யெங்கூடற் கோமான்
புலாஅ னெடுநல்வேன் மாற - னுலாஅங்காற்
பைய நடக்கவுந் தேற்றாயா னின்பெண்மை
யையப் படுவ துடைத்து. (50)

கடற்றானைக் கோதையைக் காண்கொடாள் வீணில்
அடைத்தாள் அனிக்கதவம் அன்னை - அடைக்குமேல்
ஆயிழையாய் என்னை அவன்மேல் எடுத்துரைப்பார்
வாயும் அடைக்குமோ தான். (80)

யான் ஊடத் தான்உணர்த்த யான்உணரா விட்டதற்பின்
தான்ஊட யானுணர்த்தத் தான்உணரான் – தேன்ஊறு
கொய்தார் வழுதி குளிர்சாந் தணியகலம்
எய்தா திராக்கழிந்த வாறு. (108)

# இறையனார் களவியல்

ஆங்ஙனம் புணர்ந்த கிழவோன் தன்வயின்
பாங்க னோரிற் குறி தலைப்பெய்தலும்
பாங்கிலன் தமியோள் இடந்தலைப் படலும் என்று
ஆங்க இரண்டே தலைப்பெயல் மரபே. (3)

களவினுள் தவிர்ச்சி காப்புமிகின் உரித்தே
வரைவிடை வைத்த காலை யான. (16)

காமம் மிக்க கழிபடர் கிளவியும்
காப்புச் சிறைமிக்க கையறு கிளவியும்
ஆறுபார்த் துற்ற அச்சக் கிளவியும்
இரவினும் பகலினும் நீவருக என்றலும்
கிழவோன் தன்னை வாரல் என்றலும்
தன்னுள் கையாறு எய்திடு கிளவியும்
அன்ன மரபிற் பிறவும் தொகைஇத்
தன்னை அழிந்த கிளவி எல்லாம்
வரைதல் வேட்கைப் பொருள என்ப. (30)

நிலம்பெயர்ந்து உறையு நிலையியன் மருங்கின்
களவுறை கிளவி தோன்றுவது ஆயின்
திணைநிலைப் பெயர்க்கோள் கிழவற்கும் வரையார். (51)

திணையே கைகோள் கூற்றே கேட்போர்
இடனே காலம் எச்சம் மெய்ப்பாடு
பயனே கோளென் றாங்கப் பத்தே
அகனைந் திணையும் உரைத்தல் ஆறே. (56)